பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 05 2025 **THURSDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தீவிரவாதத்தின் உலகளாவிய மையமாக பாகிஸ்தான் விளங்குகிறது என்று இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

2. கலாச்சார ஒத்துழைப்பு, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இந்தியா - ஈரான் இடையே 75 ஆண்டுகளாக சிறந்த நல்லுறவு நீடிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

3. இந்தியா மீது ராணுவ தாக்குதல் நடத்தப்பட்டால், அதற்கு உறுதியான பதிலடி கொடுக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் உறுதிபட தெரிவித்துள்ளார்.

4. இந்திய ஓ டி டி தளங்கள் மற்றும் ஊடகங்கள், பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட வெப் சீரிஸ், திரைப்படங்கள் உள்ளிட்டவற்றை ஒளிபரப்ப மத்திய அரசு தடை விதித்துள்ளது.

5. சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>

தீவிரவாதத்தின் உலகளாவிய மையமாக பாகிஸ்தான் விளங்குகிறது என்று இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி, பாகிஸ்தான் மீண்டும் இதுபோன்ற தாக்குதலை நடத்தி பதற்றத்தை அதிகரித்தால் உரிய பதிலடியை இந்தியா கொடுக்கும் என்று தெரிவித்தார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து, அதற்கான பதிலடி நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டதாக அவர் கூறினார்.

ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் பஹல்காம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்றபோது, **T R F** –ன் தலையீடு இருப்பதை பாகிஸ்தான் மறுத்ததாகவும், ஆனால், அந்த அமைப்பு தங்களின் தொடர்பை உறுதி செய்தததாகவும் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடன் தங்கியிருந்ததை சுட்டிக்காட்டிய வெளியுறவுத்துறை செயலாளர், ஐ நா பட்டியலிட்டுள்ள லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது போன்ற ஏராளமான தீவிரவாத குழுக்களின் மையமாக பாகிஸ்தான் திகழ்ந்து வருகிறது என்றார்.

பேட்டியின்போது உடனிருந்த கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் **Vyomika Singh** ஆகியோர் இந்தியாவின் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதலை நடத்த முயற்சி மேற்கொண்டதாக தெரிவித்தனர்.

எனினும், அந்த முயற்சிகள் நமது பாதுகாப்புப்படையின் இடைமறித்து தாக்கும் ஏவுகணைகளால் முறியடிக்கப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

இதனிடையே, லடாக்கின் லே பகுதியில் எந்தவொரு ட்ரோன்கள் மற்றும் ஆளில்லா விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்படுவதாக லே மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

இந்தியா - ஈரான் இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **Seyed Abbas Araghchi** –ன் இந்திய பயணம் அமைந்துள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று தம்மை சந்தித்தபோது இருநாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பு நீண்டகாலமாக நீடித்துவருவதை குடியரசுத் தலைவர் எடுத்துரைத்தார்.

பிராந்திய அளவிலான அமைதி மற்றும் முன்னேற்றத்திற்கு இருநாடுகளும் இணைந்து செயல்பட்டு வருவதாகவும் அப்போது அவர் கூறினார்.

கலாச்சார ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் எரிசக்தி பங்களிப்பில் இந்தியாவும், ஈரானும் 75 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பான நல்லுறவை கொண்டு திகழ்வதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

முன்னதாக, புதுதில்லியில் நடைபெற்ற இந்தியா - ஈரான் இடையேயான 20-ஆவது கூட்டு ஆணையக்கூட்டத்திற்கு ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சருடன், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூட்டாக தலைமை வகித்தார்.

அப்போது பேசிய திரு ஜெய்சங்கர், இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து, எல்லை தாண்டி தீவிரவாத கட்டமைப்புகள் மீது ராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும், பாகிஸ்தானுடன் பதற்றத்தை அதிகரிக்க இந்தியா ஒருபோதும் விரும்பியதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரத்தில், இந்தியா மீது ராணுவ தாக்குதல் நடத்தப்பட்டால், அதற்கு உறுதியான பதிலடி கொடுக்கப்படும் என்பதில் எந்த சந்தேகம் இல்லை என்று திரு ஜெய்சங்கர் கூறினார்.

**<<<<<<>>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடியுடன், பிரேசில் அதிபர் திரு **'Lula da Silva '** தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

அப்போது, பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்புக்கு பிரதமரிடம் அவர் இரங்கலை தெரிவித்துக்கொண்டார்.

தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் போரில் பிரேசில் தனது ஆதரவை தெரிவிப்பதாக அவர் கூறினார்.

பிரேசில் அதிபர் இரங்கல் தெரிவித்ததற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இருநாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை வலுப்படுத்துவதற்கு பிரதமரும், பிரேசில் அதிபரும் உறுதி ஏற்றுக்கொண்டனர்.

இந்த ஆண்டு பிரிக்ஸ் மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்கு பிரேசிலுக்கு தமது வாழ்த்துகளையும் திரு நரேந்திர மோடி அப்போது தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

இந்தியாவில் செயல்படும் ஓ டி டி தளங்கள் மற்றும் ஊடகங்கள், பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட வெப் சீரிஸ், திரைப்படங்கள், பாடல்கள் உள்ளிட்டவற்றை ஒளிபரப்ப மத்திய அரசு தடை விதித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து, நாட்டின் பாதுகாப்பு நலனை கருத்தில்கொண்டு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

நாட்டின் வடமேற்கு மற்றும் மத்தியப்பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், ஹரியானா, பஞ்சாப், தில்லி உள்ளிட்ட இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

தெற்கு அந்தமான் கடல் பகுதியிலும், வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு பகுதியிலும் முன்கூட்டியே வரும் 13-ஆம் தேதி தென்மேற்கு பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் அடுத்த 24 மணிநேரத்தில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 45 செகண்ட்ஸ்*

**<<<<<<>>>>>>**

யுக்ரைனுக்கு எதிராக, ரஷ்யா அறிவித்துள்ள மூன்று நாள் சண்டை நிறுத்தம் இன்று காலை முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், யுக்ரைன் நாட்டின் முக்கிய நகரங்களில் ரஷ்ய ராணுவத்தினரின் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

எனினும், ரஷ்ய விமானங்கள் சுமி பிராந்தியத்தில் இருமுறை தாக்குதலில் ஈடுபட்டதாக யுக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

இரண்டாம் உலகப்போரின் 80-ஆவது ஆண்டு விழாவையொட்டி, மாஸ்கோ இந்த சண்டை நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-3 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Seongbin Sim** –ஐ வென்றார்.

--------------------

தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty, Unnati Hooda** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ஆயுஷ் ஷெட்டி, 21-16, 15-21, 21-17 என்ற செட் கணக்கில், இந்தியாவின் ஸ்ரீகாந்தை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் உன்னத்திஹூடா 21-12, 21-7 என்ற செட் கணக்கில், தைவானின் **Sih Yun Lin**-ஐ வென்றார்.

--------------

ஈரானில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் கரண் சிங், பிரஜ்வால் தேவ் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

----------------

**Lopota** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Shrivalli Rashmikaa** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-4, 6-2 என்ற செட் கணக்கில், ரஷ்யாவின் **Daria**-வை வென்றார்.

-------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **‘Riya Batiya** - ஸ்பெயினின் **‘Alica Linana** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<>>>>>